# மாகாண விவசாயத் திணைக்களம் - வடமாகாணம்

## மேலதிக உணவுப் பயிர்களின் உற்பத்தியை ஊக்குவிப்புத்திட்டம்

விரைவான மத்திய கால உணவு உற்பத்தி தேசிய செயற்திட்டத்தின் கீழ் மேலதிக உணவுப் பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளுக்கான சலுகைகளை அமுல் செய்வதற்கான ஆலோசனையில் சின்ன வெங்காயம், மிளகாய், நிலக்கடலை, பாசிப்பயறு, உழுந்து, கௌபி, எள்ளு, பெரிய வெங்காயம், உருளைகிழங்கு, சோளம், குரக்கன், மஞ்சள், இஞ்சி, சோயா, கொள்ளு, வெள்ளைப்பூண்டு போன்ற பயிர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இத் திட்டத்திற்கு அமைவாக ஒரு பயிரிற்கான அதிக பட்சம் 05 ஏக்கர் விஸ்தீரணத்தில் தனிப் பயிர்ச்செய்கைக்கு பின்வருமாறு சலுகை வழங்கப்படும்.

- பயிரிடப்படும் விஸ்தீரணத்தில் முதல் ½ ஏக்கரிற்கான விதைச் செலவு முழுவதையும் அரசு வழங்கும்
- அப் பயிர்ச் செய்கையில் மிகுதி 4½ ஏக்கருக்குரிய விதைச் செலவின் 50% இனை அரசு வழங்கும்
- ஒரு விவசாயி மேற்குறிப்பிட்ட பயிர்களுக்கு தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம் பல பயிர்களை செய்கை பண்ணும் சந்தர்பத்தில் ($^1/_4$ ஏக்கரிற்கு மேல் ஒவ்வொரு பயிரும் 5 ஏக்கருக்குள்) அனைத்து பயிர்களுக்கும் இவ் உதவி உரித்தாகும்
- இந் நிலப்பரப்பில் ($^1/_4$ ஏக்கர்) குறிப்பிட்ட பல பயிர்களை செய்கை பண்ணியிருந்தால் இவ் உதவி கிட்டாது.

இத் திட்டத்தில் நில உரிமையின் அடிப்படையில் அல்லாது, பயிரிடப்பட்ட விஸ்தீரணத்தையும், பயிரிடப்பட்ட விவசாயியையும் கவனத்திற் கொண்டு கொடுப்பனவு வழங்கப்படும்.

இக் கொடுப்பனவிற்கான தகைமைகளாவன,

- பயிர்ச் செய்கையாளர் பயிர்செய்கையை ஆரம்பித்தும் உடனடியாக தமது பிரதேசத்தின் விவசாய போதனாசிரியர் அலுவலகத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தனது விபரங்களைப் பதிவு செய்தல் வேண்டும்.
    - செய்கையாளரின் பெயர்
    - தேசிய அடையாள அட்டைஇலக்கம்
    - பயிர்/பயிர்கள்
    - பயிர் செய்யும் நிலத்தின் விஸ்தீரணம்
    - பயன்படுத்திய விதைகளின் அளவு(கி.கி)
    - நிரந்தர முகவரி
    - பயிர்ச் செய்கை அமைந்துள்ள இடம்
    - பூகோள அமைவிடம் (GPS)

பயிர்ச் செய்கைக்கான விதைகளை விவசாய திணைக்களத்தின் தனியார்துறையின் அல்லது தனது விதைகள் (சுயவிதைகள்) அல்லது ஏனைய விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட விதைகள் என எவ்வகையில் பெற்றுக்கொண்டிருந்தாலும் பயிரிடப்பட்ட விஸ்தீரணத்திற்கு அமைவாக பயிர்களின் எண்ணிக்கை (பயிர்ச் செறிவு) பராமரித்துக் கொள்ளவேண்டும்.

விவசாய போதனாசிரியர் மூலம் கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக பின்வரும் விடயங்கள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

1. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பில் பயிர் செய்யப்பட்டுள்ளதா? என்பது
2. குறித்தளவு நிரப்பரப்பிற்கேற்ப விளைசளைப் பெற்றுக்கொள்ளவதற்காக போதுமானளவு செடிகளின் எண்ணிக்கை காணப்படுகின்றதா?
3. பயிர்ச்செய்கையானது முறையாகப் பராமரிக்கப்பட்டுள்ளதா?
4. முளைக்கும் போது அல்லது வேறு பயிர்ச் செய்கை இழப்புக்களின் காரணமாக ஆய்வு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் பதிவு செய்த பயிர்ச்செய்கை நிலப்பரப்பை விட குறைந்த நிலப்பரப்பளவு காணப்படுமாயின், செலுத்த வேண்டிய கொடுப்பனவின் அளவு
5. சிபாரிசு அவதானிப்புகளை பிரதேசத்திலுள்ள அனைத்து விவசாயிகளும் பயிர் ஸ்தாபித்து ஒரு மாத காலத்தினுள் கொடுப்பனவுகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் வழங்கல்

இத் திட்டத்திற்கான கொடுப்பனவு உறுதிச் சீட்டுகளை விவசாய போதனாசிரியர் தயாரித்து, அவரது சிபாரிசுடன் உதவி விவசாய பணிப்பாளரின் ஊடாக மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளரிற்கு காலதாமதமின்றி சமர்பித்தல் வேண்டும், விதைச் செலவிற்கான மானியம் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அவ் விவசாயிகளிற்கே செலுத்தப்படல் வேண்டும். விவசாயி கடன் அடிப்படையில் விவசாயத்திணைக்களத்தில் விதைகளைப் பெற்றிருந்தால் அதற்கான கொடுப்பனவை உரிய நிறுவனங்களிற்குச் செலுத்த வேண்டும்.

இச் செயற்திட்டத்திற்கு எதிர்ப்பாக்கப்படும் செலவை மாகாண விவசாயத் திணைக்களம், மே மாதம் 15ஆம் திகதிக்கு முன் விவசாய அமைச்சுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மாகாண விவசாயத் திணைக்களம், விவசாயத் திணைக்களம் ஆகியவற்றிற்கு ஒதுக்கீடுகள் வழங்கப்படும். இம் மானிய கொடுப்பனவுகள் 2020 ஆகஸ்ட் 15ஆம் திகதிக்கு முன் விவசாயிகளுக்குச் செலுத்திப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.